# 10

## சங்ககால ஆற்றுப்படை நூல்கள் சுட்டும் இசைக்கருவிகள்

முனைவர் திருமதி சுகன்யா அரவிந்தன்
விரிவுரையாளர், இசைத்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இலங்கை
saravinthon@hotmail.com

### முன்னுரை

இசை என்பது மக்கள் வாழ்க்கையோடு ஒன்றி வளர்ந்தது. நால்வகைப்பாகுபாட்டைக் கூறவந்த தொல்காப்பியம் அவ்வவ் நிலங்களில் வாழும் சமூகங்களில் மக்கள் குழுமங்கள், இயற்கைச் சூழல், வாழ்க்கை முறை, தொழில், உணவு முதலிய அனைத்தையும் கூறுகின்றது. பறை, யாழ் போன்ற இசைக்கருவிகளோடு அக்கால மக்கள் வாழ்க்கையைத் தொடங்கினர் என்பதால் இசையின் முக்கியத்துவமும் இதனூடாகப் புலனாகும்.

சங்க இலக்கியங்களில் இசை பற்றிய செய்திகளும் இசைக் கருவிகள் பற்றிய செய்திகளும் மிகுதியான அளவில் காணப்படுகின்றன. எனினும் பத்துப்பாட்டிலுள்ள ஆற்றுப்படைநூல்களில் இடம்பெறும் இசைக்கருவிகள் பற்றிய செய்திகளை எடுத்துக் கூறுவதாகவே இவ்வாய்வானது அமைகின்றது.

### சங்க கால இசைக்கருவிகள்

இசைக்கருவிகளை இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். பண்களை இசைக்கத் தகுந்தவற்றைப் 'பண்ணிசைக்கருவிகள்' என்றும், தாளத்தைப் பொருத்தமாகக் குறித்துச் சுவையுடன் ஒலிக்கும் கருவிகளைத் 'தாளக் கருவிகள்' என்றும் குறிப்பிடலாம். மேலும் இசையெழுப்பும் முறைமைகளுக்கேற்ப அவற்றை நரம்புக்கருவி, துளைக்கருவி, தோற்கருவி, கஞ்சக்கருவி எனப்பிரிக்கலாம். இவை தவிர இயற்கைப் பொருட்களான கொம்பு, சங்கு போன்றவையும் இசைக்கருவிகளாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.

### பண்ணிசைக்கருவிகள்

வில்யாழ், நெய்தல் நார்கொண்டு யாழ்நரம்பைச் செய்வது போன்று மரல் செடியின் நாரால் வில் யாழுக்கு நரம்பு முறுக்கிக்கட்டும் கருவிபற்றி தரவுகளைப் பெரும்பாணாற்றுப்படையில் கண்டுகொள்ள முடிகின்றது.

'இன்றீம் பாலை முனையிற் குமிழின்
புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சிப்
பல்காற் பறவை கிளைசெத் தோர்க்கும்' (பெரும் - 180-183

பாலைப்பண்ணை வண்டுகள் வெறுத்து குமிழின் உட்கூடான கொம்பை மரல் நாரினால் செய்த நரம்பு கொண்டு வளைத்துக்கட்டிய வில்யாழில் இசைக்கப்படும் குறிஞ்சிப்பண்ணைக் கேட்டு, தம் இனத்தின் ஓசையெனக் கருதி இனிய உணர்வுடன் கேட்டு மகிழுமாம் என்கின்ற குறிப்புக்கள் இங்கு கிடைக்கப்பெறுகின்றது.

## யாழ்.

நரம்புக்கருவியினுள் யாழ் என்பது பழைமையானதும் பெரு வழக்காகவும் அமைந்த பண்டைய இசைக்கருவியாகும். திருவாவினன் குடியில் இறைவணக்கம் செய்வோர் யாழிசை மீட்டிப்பாடுகின்றனர்.

'செவிநேர்பு வைத்த செய்வுறு திவவின்
நல்லியாழ் நவின்ற நயனுடை நெஞ்சின்
மேன்மொழி மேவலர் அன்னரம் புறர
நோயின நியன்ற யாக்கையர் மாவின்' (திருமுரு – 140 -142)

என்பதில் யாழிசையோடு இணைந்து இறைவனை வணங்கிப்பரவும் நிலை விளக்கப்படுகின்றது.

யாழின் பாகங்களை முழுமையாக விளக்கிக்காட்டியிருப்பது பொருநராற்றுப்படை.

'குளப்புவழி யன்ன கவடுபடு பத்தல்
விளக்கழல் உருவின் சிறுயுற பச்சை
..........................
அணங்கு மெய்ந்நின்ற அமைவரு காட்சி'(பொருந – 4 - 20)

உடையதாக யாழ் விளக்கப்பட்டுள்ளதை இப்பாடலில் காணலாம். பத்தல், பச்சை, போர்வை, ஆணி, வறுவாய், மருப்பு, திவவு, நரம்புகள் ஆகிய பல பாகங்களைக் கொண்டு யாழ் விளங்குகின்றது. அதன் குடம் போன்ற பகுதி பொல்லம் என்று அழைக்கப்பட்டுள்ளது. இப் பொல்லம் பற்றியச் செய்தியைச் சிறுபாணாற்றுப்படை பின்வருமாறு விளக்குகின்றது.

'பைங்கண் ஊகம் பாம்பு பிடித்தன்ன
.................................
பாடுதுறை முற்றிய பயன்தெரி கேள்வி'(சிறுபா–221-228)

என்ற பகுதி நரம்பித் தொகுதியை விளக்கிக்காட்டுகின்றது. யாழின் சில பகுதிகள் இதற்குள் அடங்குகின்றன. பொரும்பாணாற்றுப்படையானது, யாழில் அமைந்துள்ள போர்வையின் விளக்கத்தையும், ஆணிமுறிக்கப் பட்டுள்ள இடங்கள் மேடிட்டுத் தோன்றுவதையும் சுவையாக,

'வள்ளிதழ் மாமலர் வயிற்றிடை வகுத்தன்

CS CamScanner

……………………
உருக்கி அன்ன பொருத்துறு போர்வை'(பெரும் 5-9)

எனக் கூறுகின்றது.

மலைபடுகடாத்தின் விளக்கம் பேரியாழின் மருப்புப்பகுதியை சிறப்பாக,

'வதுவை நாறும் வண்டு கமழ்; ஐம்பால்
…………………………
வணர்நடதேந்த மருப்பின் வள்ளுயிரிப் ஆபரியாழ்'
(மலைபடு 30-37)

எனக் கூறுகின்றது.

கின்னரம்

கின்னரம் என்பது யாழ்போன்ற ஒருவகையான இசைக்கருவி என்பதை,

'………………இன்சீர்க்
கின்னர முரலு மண்நகுடைச் சாரல்'(பெரும் - 494)

எனப்பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

குழல்

தமிழ் மக்களின் இசைக்கருவிகளால் சிறப்பிடம் பெறுவது குழலாகும். துளை வழியாகக் காற்றைச் செலுத்தி ஒலியை முறையாக எழச்செய்து இசை வகுத்துச் சுவை காண்பது குழலிசைக்கருவியாகும். குழலில் துளையிடும் முறையை,

'இந்நுணவிர்புகை கமழ்க் கைம்முயன்று
ஞெலிகோற் கொண்ட பெறுவிறன் ஞெகிழிச்
செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்'(பெரும் 177 – 179)

என இரும்புக்கோலை நெருப்பிலிட்டு பழுக்கக் காய்ச்சி மூங்கில் குழலை அளவு கண்டு தொட்டுத் துளையிடுவதை பெரும்பாணாற்றுப்படை கூறுகின்றது.

சங்கு

சங்கு ஒரு இயற்கையான இசைக்கருவி. அதனைக் கோடு, வளை, எனக் கூறுவதன் மூலம் முழவுக்குறுங்கம்பு கொண்டும், கைவிரலை பயன்படுத்தி அடித்து தாளவிசை எழுப்பும் கருவியாகும்.

பறை

ஆடல் பாடல் இசைவிழாக்கள் ஆகியவற்றில் பறை என்கின்ற இசைக்கருவி பயன்படுத்தப்பட்டது. தோற்கருவிகளுக்குப் பொதுப் பெயராகப் பறை என்பது வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலானவை பறை என்ற முடிவுடன் காணப்படுகின்றது.

குரவையாடும் போது தொண்டகச்சிறுபறை முழக்கப்படும் செய்தியைத் திருமுருகாற்றுப்படை கூறுகின்றது.

'குன்றச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து
தோண்டகச் சிறுபறைக் குரவை யயர'(திருமுரு 196 -197)

என்று கூறுவதில் குன்றில் வாழ்வோர் கூடிமகிழ்ந்து தொண்டகச் சிறுபறை ஒலிக்க குரவை ஆடுகின்றனர். பறை கடுமையான ஒலியையும் எழுப்பும் தன்மையுடையது. கோடியர் பறையை இசைப்பர். அவர்களைக் கூறும் போது கடும்பறைக்கோடியர் (மலை -236) என்று கூறுகின்றது. மேலும் மலையில் வாழும் குரவர் குரவையாடும் போது பறையொலி எழுப்பி மகிழ்வதை,

'நறவு நாட்செய்த குறவர்தம் பெண்டிரோடு
......................
வான்நோய் மீமிசை அயிருங் குரவவை' (மலைபடு 320 – 322)

எனக் கூறுகின்றது.

## துடி

துடியைப்பற்றிய குறிப்புக்கள் சங்க இலக்கியத்தில் மிகக் குறை வாகவே உள்ளன. சுடுக்குப்போன்ற அமைப்பையே துடிஎன்று கருது கின்றனர்.

'துடியிடி அன்ன தூங்க நடை கிழவியொடு
பிடியுணர் வேழம் பெட்டவை கொள்கென'(பொருந 125-126)

என்று யானையின் பாதத்திற்கு உவமையாகத் துடி காட்டப்பட்டுள்ளதைத் தவிர வேறு எதுவும் அறிய முடியவில்லை.

பெரும்பாணாற்றுப்படை துடி பற்றி, 'கடந்துடி தூங்கும் கணைக்காற் பந்தர்' (பெரும் - 124) என்று கூறுவதன் மூலம் பந்தலில் தொங்கவிடப் பட்டுள்ள செய்தி தெரிகின்றது.

## தடாரி

தடாரி என்பது பாணர்கள் பயன்படுத்திய தோற்கருவி ஆகும். இதனைக் கிணைப்பறை என்றும் கூறுவர். பாணர் விடியலில் தடாரியைய் கொட்டிப்பாடும் காட்சியை,

'கைக்கச டிருந்தவென் கண்ணகன் தடாரி
..........................
ஒன்றியான் பெட்டா வளைவையின்'(பெருந 70 -73)

எனப் பொருணராற்றுப்படை கூறுகின்றது. இருசீர் பாணியாகிய இரட்டைத்தாளத்திற்கு ஏற்றவாறு தடாரி தட்டுப்படுகின்றது.

பதலை

பதலை என்ற கருவி அருகிய நிலையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒருபுறம் மாத்திரம் இயக்கக்கூடிய தோற்கருவி பதலை ஆகும். இசைக் கருவிகளை அடுக்கிக் கூறும்போது,

'நொடிதரு பாணிய பதலையும் பிறவும்' (மலைபடு 11)

என்ற குறிப்புத் தரப்படுகின்றது. நொடிதரு பாணியை உடையது. பதலை நொடி என்பது கைவிரலைச் சொடக்குவது என்கின்றபொருளையும் மாத்திரை அளவையும் குறிப்பதாகும்.

எல்லரி

எல்லரி என்பதும் ஒருவகைப்பறையாகும். நச்சினார்க்கினியர் அதனைச் சல்லி என்று குறிப்பிடுகின்றார். விளக்கம் பொருந்திய தாளத்தைக் கைக்கொண்டு ஒலிக்கும் வலிய வாயையுடையது என்பதை,

'கடிகவர் பொரிக்கும் வல்வா யெல்லரி'(மலைபடு -10)

என மலைபடுகடாம் கூறுகின்றது.

ஆகுளி

முழவோடு சேர்ந்து இசைக்கப்படும் தாளவிசைக்கருவியாகும். மலைபடுகடாம் ஆகுளி பற்றிய செய்தியை,

'திண்வார் விசித்த முழவொடு ஆகுளி'(மலைபடு 34)

'விரலூன்று படுகண் ஈகளி கடுப்பக்
குடிஞை யிரட்டு நெடுமலை யடுக்கத்து'(மலைபடு 140 – 144)

எனக் கூறுகின்றது. ஆகுளியைக் கைவிரல் கொடு தட்டி இசையொலி எழுப்பியிருப்பது புலனாகும்.

பாண்டில்

பாண்டில் என்பது கஞ்சக்கருவியாகும். தாளமிடுவதற்காகப் பயன் படுவது. பாண்டில் என்பது உலோகத்தாலான தட்டையாகச் செய்யப் பட்டதாகும். நுட்பமான வடிவுடைய விளக்கமுடைய அடர்த்தியான பாண்டில் என்பதை,

'நுண்ணுருக் குற்ற விளங்கடர்ப் பாண்டில்'(மலைபடு 43)

என மலைபடுகடாம் கூறுகின்றது. தட்டை என்பது தினைப்புனக் காவலில் கிளிகள் முதலான பறவைகளை விரட்டியோட்டுவதற்காக அடித்து முழக்கப்படும் கருவியாகும்.

'நடுவு நின்றிசைக்கும் அரிக்குரல் தட்டை'(மலைபடு – 9)

என மலைபடுகடாம் கூறுகின்றது. நச்சர் விளக்கம் கூறுமிடத்து மூங்கிலைக் கண்ணுக்குக்கண் உள்ளாக நறுக்கி பலவாறாகப் பிழந்து அமைப்பார் என்றும், கரடிகை என்ற பெயரும் இதற்குண்டு என்று குறிப்பிடுகின்றார்

CS CamScanner

## முடிவுரை

இவ்வாறாக ஆரம்பகால வாழ்க்கை வட்டமானது இசையுடன் கூடவே நகர்ந்து வளர்ந்தமையை இலக்கியங்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. தமிழர் தம் வாழ்வியல் பற்றி வரலாறு பேசும் சங்க இலக்கியங்களுள் சிறப்பாக ஆற்றுப்படை நூல்களில் இசைக்கருவிகள் பல இருந்தமை பற்றிய விரவாக தகவல்களை மேற்கண்ட எடுத்துக்காட்டுக்கள் வாயிலாகத் தெரிந்து கொள்ள முடிகின்றது. இதன் பயனாக தமிழர் வாழ்வியலும் இசையும் எத்துணை தூரம் இணைந்து பிணைந்த வளர்ச்சியைக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்துகொள்ள முடிகின்றது.

## உசாத்துணை நூல்கள்:


1. சுந்தரம். வீ.பா.க: தமிழிசையியல்: 1994: தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்
2. தனபாண்டியன்: து.ஆ. இசைத்தமிழ் வரலாறு: பகுதி 1: 1994: தமிழ்ப்பல்கலை கழகம்: தஞ்சாவூர்
3. வேங்கடசாமி: மயிலைசீனி: தமிழா வளர்த்த அழகுக் கலைகள்: 2000: மணிவாசகர் பதிப்பகம் : சென்னை
4. அருளம்பலம்: சு.பண்டிதர்: திருமுருகாற்றுப்படை ஆராய்ச்சி யுரை: 1937: யாழ்ப்பாணம்.
5. பாக்யமேரி: தமிழிலக்கிய வரலாறு : 1998 : சென்னை
6. பத்துப்பாட்டு நூல்கள்V